செ. கு. எண்:053 நாள்:01.03.2014

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 1.3.2014

அரியலூர் மாவட்டம், கயர்லாபாத் கிராமத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் ஆலையில் ஒப்பந்தப் பணியாளராகப் பணியாற்றி வந்த திரு. சௌந்திரராஜன் என்பவர் 7.2.2014 அன்று இயந்திரத்தில் பழுது நீக்கும் பணியை மேற்கொண்டிருந்த போது, திடீரென்று இயந்திரம் இயங்க ஆரம்பித்ததில் அதில் சிக்கி பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த சௌந்திரராஜன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த சௌந்திரராஜன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9